முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை
அசல் வழக்கு எண் – 57/2016

**வாதி தரப்பு சாட்சி–2 பொன்னர் –** திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 21.04.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**5, 6 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1) தாவா சொத்து உள்ள கிராமத்தில் நான் வசிக்கவில்லை என்றால் சரிதான். எனது விலாசத்தைக் காட்ட எனது ஆதார் அட்டையை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் சாட்சி கையெழுத்து போட்ட வா.சா.ஆ.2 தானசெட்டில்மென்ட்டை படித்து பார்த்தேனா என்றால் இல்லை. தாவா சொத்து அரசு பதிவேட்டில் என்னவாக வகைபாடு செய்யப்பட்டுள்ளது என்றால் அதுபற்றி தெரியவில்லை. வாதியின் வீட்டிற்கு மேற்குபுறம் தாவா சொத்து காலிமனை உள்ளது என்றால் சரிதான். மேற்படி காலிமனை யாரால், எதற்காக ஒதுக்கப்பட்டது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. மேற்படி இடம் படிப்பகம், நூலகம், ரேசன் கடை ஆகியவை கட்டுவதற்காக அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்ட இடம் என்றால் அதுபற்றி தெரியாது. வா.சா.ஆ.2 ல் உள்ள எனது சாட்சி கையெழுத்தை சார்பதிவாளர் அலுவலகத்திற்கு வெளியில் வைத்துதான் போட்டேன் என்றால் சரிதான்.

2) நான் வா.சா.ஆ.2 எழுதி கொடுத்தவருக்கு அதில் உள்ள சொத்து சொந்தமானதா என தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்திற்கு கிழக்கே உள்ள வீட்டில்தான் மின்இணைப்பு உள்ளதா என்றால் அதுபற்றி தெரியாது. தாவா சொத்து யாருடைய அனுபவத்தில் உள்ளது என தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்து நூலகம் மற்றும் ரேசன் கடை கட்ட அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்ட இடம் என்றால் அதுபற்றி தெரியாது. சிவப்பிரகாஷ் என்னுடன் பணிபுரிகிறார் என்றால் சரிதான். எனவே அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சி

அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தான செட்டில்மென்ட்டில் சாட்சி கையெழுத்து போட்டது குறித்து சாட்சி அளிக்கிறேன். தாவா சொத்திற்கு வில்லங்க சான்றிதழ் பார்த்தேனா என்றால் இல்லை. தாவா சொத்தின் உண்மைத்தன்மை பற்றி தெரியாமல் வாதி எனக்கு நண்பர் என்பதால் பொய்சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனவே எனது சாட்சியம் ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**